## தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் தொடக்கம்

**புதுடெல்லி:** தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தில் பயன்பெற இதுவரை 9 ஆயிரத்து 246 பயனாளிகள் பதிவு செய்துள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் பொதுச்சேவை மையங்களின் மூலம் பதிவு செய்துள்ளனர். நேற்று(17.10.2023) வரை கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3676 பேரும், ஈரோடு மாவட்டத்தில் 1025 பேரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1506 பேரும், ராமநாதபுரம் மாவட்டத்தில் 896 பேரும் பதிவு செய்துள்ளனர். இதேபோல், நீலகரி மாவட்டத்தில் 187 பேரும், திருப்பூர் மாவட்டத்தில் 895பேரும், விருதுநகர் மாவட்டத்தில் 1061 பேரும் பதிவு செய்துள்ளனர். இத்திட்டத்தில் பயனடைய தேர்வு செய்யப்படுவதற்கு மூன்றடுக்கு சரிபார்ப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்படும். மூன்று கட்ட சரிபார்ப்பு நடைமுறைகளுக்கு பின்னர் இத்திட்டத்தில் பயனடைவதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இத்திட்டம் கடந்த மாதம் 17ம் தேதி பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கிவைக்கப்பட்டது. 18 வகையான பாரம்பரிய கைவினை கலைஞர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், 13 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், திறன் மேம்பாட்டு அமைச்சகம், நிதி அமைச்சகத்தின் நிதி சேவைகள் துறை ஆகியவை இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## 69-வது தேசிய திரைப்பட விருதுகளை வழங்கினார் முர்மு: அல்லு அர்ஜூன், மாதவன் உட்பட பலர் விருதுகளை பெற்றனர்

.

**புதுடெல்லி:** டெல்லியில் நேற்று நடைபெற்ற 69-வது தேசிய திரைப்பட விருது விழாவில், அல்லு அர்ஜூன், எஸ்.எஸ்.ராஜமவுலி, கீரவாணி, தேவி ஸ்ரீ பிரசாத், மாதவன் உட்பட பலருக்கு குடிரயரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருதுகளை வழங்கினார்.

69-வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நேற்று நடைபெற்றது. இதில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கலந்து கொண்டு, 2021-ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகளை வழங்கினார். இந்த விழாவில் நடிகர் மாதவன் இயக்கிய ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட், ஆர்ஆர்ஆர் மற்றும் புஷ்பா திரைப்படங்கள் பல விருதுகளை பெற்றன. புஷ்பா படத்தில் நடித்த நடிகர் அல்லு அர்ஜூன் முதல் முறையாக சிறந்த நடிகருக்கான தேசிய விருதை பெற்றார். அந்தப் படத்தின் இசையமைப்பாளர் தேவி பிரசாத்தும், சிறந்த இசைய மைப்பாளருக்கான தேசிய விருதை பெற்றார்.

ஆஸ்கர் விருது பெற்ற ஆர்ஆர்ஆர் திரைப்படம் பல தேசியவிருதுகளை பெற்றது. இப்படத்தின் இசையமைப்பாளர் கீரவாணி, சிறந்த இசை இயக்கத்துக்கான விருதை பெற்றார். சிறந்த பாடகருக்கான விருதை கால பைரவா பெற்றார். சிறந்த நடனத்துக்கான விருதை பிரேம் ரக்ஷித் பெற்றார். ஸ்பெஷல் எஃபெக்ட் மற்றும் சிறந்த சண்டை காட்சிகளுக்கான விருதுகளையும் ஆர்ஆர்ஆர் படக்குழு பெற்றது. பாடலாசிரியர் சந்திரபோஸுக்கும் தேசிய விருது வழங்கப்பட்டது. கருவறை ஆவணப்படத்துக்கு இசையமைத்ததற்காக காந்த் தேவாவுக்கு தேசிய விருது வழங்கப்பட்டது.

மாநில மொழி பட வரிசையில் கடைசி விவசாயி சிறந்த தமிழ் படத்துக்கான விருதை பெற்றது. இரவின் நிழல் படத்தில் பாடியதற்காக பாடகி ஷ்ரேயா

கோஷல் சிறந்தபாடகிக்கான விருதை பெற்றார். கன்னடத்தில் சார்லி 777 படம் சிறந்த கன்னட படத்துக்கான விருதைபெற்றது. சிறந்த மலையாள படத்துக்கான விருதை ஹோம் திரைப்படம் பெற்றது.

இந்த விழாவில் பாலிவுட் பிரபலங்கள் ஆலியா பட், ரன்பிர் கபூர், கரண் ஜோகர் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

## 2001 முதல் ஒவ்வொரு ஆண்டும் 100 - 140 வீரர்கள் தற்கொலை: இந்திய ராணுவம் தகவல்

**புதுடெல்லி:** ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டம் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் உள்ள ஒரு ராணுவ நிலையில் பணியில் இருந்த அம்ரித்பால் சிங் என்ற அக்னி வீரர் கடந்த 11-ம் தேதி தற்கொலை செய்துகொண்டார். அவரது இறுதிச் சடங்கில் ராணுவ மரியாதை அளிக்கப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து ராணுவம் எக்ஸ் சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது: தற்போதுள்ள நடைமுறைக்கு ஏற்ப, அந்த அக்னி வீரரின் உடல் மருத்துவ மற்றும் சட்ட நடைமுறைகளுக்குப் பிறகு அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆயுதப்படைகள், அக்னிபாதை திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்னரோ வீரர்களுக்கு உரிய பலன்கள் மற்றும் மரியாதை தொடர்பாக வேறுபாடு காட்டியதில்லை.

ஆயுதப்படைகளில் துரதிருஷ் டவசமான தற்கொலை சம்பவங் கள் நிகழும்போது அந்த வீரரின் இறுதிச் சடங்கில் ராணுவ மரியாதை அளிக்கப்படுவதில்லை.

கடந்த 2001 முதல் ஒவ்வொரு ஆண்டும் 100 முதல் 140 வரையிலான வீரர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். இந்தவீரர்களுக்கு இறுதிச் சடங்குகளை நடத்துவதற்கான உடனடி நிதியுதவி உட்பட, குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் வழங்கப்படுகிறது. இதற்கு முன்னுரிமையும் அளிக்கப்படுகிறது.

இவ்வாறு ராணுவம் கூறியுள்ளது.

## வரும் 2040-க்குள் நிலவுக்கு மனிதனை அனுப்ப வேண்டும்: ‘ககன்யான்’ ஆலோசனை கூட்டத்தில் விஞ்ஞானிகளிடம் பிரதமர் மோடி வலியுறுத்தல்

**புதுடெல்லி:** 2040-ம் ஆண்டுக்குள் நிலவுக்கு இந்தியாவின் சார்பில் மனிதனை அனுப்ப வேண்டும் என்று விஞ்ஞானிகளிடம் பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

ககன்யான் திட்டத்தின் முன்னேற்றம், விண்வெளி ஆய்வு முயற்சிகளின் எதிர்காலம் குறித்து பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நேற்று உயர் நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது வரும் 21-ம் தேதி காலை 9 மணிக்குள் ஹரிக் கோட்டா ஏவுதளத்தில் இருந்து ககன்யான் திட்டத்தின் சோதனை ராக்கெட்டை ஏவ இஸ்ரோ திட்ட மிட்டுள்ளது குறித்தும் விவாதிக்கப் பட்டது. இதைத் தொடர்ந்து நடை பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ககன்யான் திட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில், ககன்யான் திட்டம் பற்றிய விரிவான கண்ணோட்டம், திட்ட அறிக்கைகள் ஆகியவை விண்வெளித் துறை சார்பில் வழங்கப்பட்டன.

இந்த ஆலோசனைக் கூட்டத் தின்போது, 2040-க்குள் நிலவுக்கு இந்தியாவின் சார்பில் மனிதனை அனுப்ப வேண்டும் என்று விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தினார்.

இதுகுறித்து பிரதமர் மோடி மேலும் கூறியதாவது:

2035-ம் ஆண்டுக்குள் இந்தியா வின் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை உருவாக்க வேண்டும். 2040-ம் ஆண்டுக்குள் நிலவுக்கு இந்தியாவின் சார்பில் மனிதனை அனுப்ப வேண்டும்.

இதற்கான பணிகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் செய்ய வேண்டும். இதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும். வெள்ளி கிரகத்தின் ஆர்பிட்டர் மிஷன், செவ்வாய் லேண்டர் உள்ளிட்ட கோள்களுக்கு இடையேயான பயணங்களில் நாம் பணியாற்ற வேண்டும்.

இந்த சாதனையை அடைய, சந்திரயான் பணிகள், அடுத்த தலைமுறை ஏவுகணை வாகனத் தின் வளர்ச்சி, புதிய ராக்கெட் ஏவுதளம் கட்டுதல், மனிதனை மையமாகக் கொண்ட ஆய்வ கங்கள், ஆய்வகங்கள் தொடர் புடைய தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவைகளில் பணியை தீவிரப்படுத்த வேண்டும்.

விண்வெளி ஆய்வில் இந்தியா புதிய உயரங்களை அடைய வேண்டும். அதற்கான முன்னெடுப்புப் பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட வேண்டும்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் நான்காவது நாடாக இந்தியா உருவாகும். இந்த சாதனையை எட்ட இந்தியா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

## தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதை நாடாளுமன்றமே முடிவு செய்யும்: உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி

**புதுடெல்லி:** தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதை நாடாளுமன்றம், சட்டமன்றங்களே முடிவு செய்யும் என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கோரும் வழக்கில், தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், எஸ்.ரவீந்திர பட், ஹீமா கோலி, பிஎஸ் நரசிம்மா ஆகியோர் அடங்கிய அமர்வு 4 வெவ்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளது. தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் முதலில் தீர்ப்பை வாசித்தார். அதில் அவர், "உச்ச நீதிமன்றத்தால் சிறப்புத் திருமணச் சட்டத்தை ரத்து செய்ய முடியாது. அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்தை அங்கீகரிக்கும் ஷரத்தை சேர்க்கவும் முடியாது. திருமணங்கள் தொடர்பான சட்டங்களை நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும்தான் இயற்ற முடியும்.

அதேவேளையில், திருமண பந்தம் என்பது நிலையானது அல்ல. தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமண பந்தத்தில் இணைய உரிமையும், சுதந்திரமும் உள்ளது. அதுபோன்ற இணையேற்புகளை அங்கீகாரிக்க முடியாமல் போவது அச்சமூகத்தினர் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்களால் இப்போதுள்ள சட்டத்தின்படி திருமணத்துக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள இயலாது என்பதால் நாடாளுமன்றமும், சட்டமன்றங்களுமே தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்தை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும். தன்பாலின ஈர்ப்பாளர்களின் உறவு, அரசால் அசட்டை செய்யப்படவோ அல்லது பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதோ கூடாது" என்றார்.

நீதிபதி பட் தனது தீர்ப்பில் கூறுகையில், "திருமண பந்தங்களை சட்டங்கள்தான் அங்கீகரிக்கும். இந்த நீதிமன்றம் அதற்கான சட்டங்களை இயற்றும்படி அரசை வலியுறுத்த மட்டுமே முடியும்" என்றார். மேலும், "இணையேற்புகள் சட்ட அங்கீகாரம் இல்லாமல் உயிர்ப்புடன் இருக்க இயலாது. ஓர் அமைப்பை உருவாக்குவது என்பது அரசின் கையில்தான் இருக்கிறது. அத்தகைய அமைப்பை உருவாக்க நீதிமன்றம் வாயிலாக வலியுறுத்தலாம்" என்று நீதிபதி பட் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நீதிபதி கவுல் அளித்த தீர்ப்பில், "தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பதன் மூலம் திருமண சமத்துவத்தில் அடுத்த அடியை எடுத்துவைக்கலாம்" என்று குறிப்பிட்டார்.

5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் ஈடுபட்டிருந்த பெண் நீதிபதி ஹீமா கோலி தீர்ப்பேதும் வழங்கவில்லை. இந்த வழக்கில் 5-ல் நான்கு நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். அதில், 3 நீதிபதிகள் தன்பாலின திருமணத்தை சட்டபூர்வ அங்கீகரிப்பது நாடாளுமன்றம், சட்டமன்றங்களால் மட்டுமே முடியும் என்ற நிலைப்பாட்டினை எடுத்துள்ளனர்.

**நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை...** - முன்னதாக, இந்த வழக்கு விசாரணையின்போது உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததுபோது, "தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று கோருவது நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களை ஆதரிப்பதன் மூலம் ஒரு புதிய சமூக நிறுவனத்தை உருவாக்க நீதிமன்றம் முயலக் கூடாது. நீதிபதிகள் இந்தப் பணியை நாடாளுமன்றத்திடம் விட்டுவிட வேண்டும்.

இதுபோன்ற 'வேறு வகை' திருமணங்களை சமூக ரீதியாகவும், மத ரீதியாகவும் ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்பது குறித்து மக்கள் முடிவு செய்வார்கள். ஒரு

புதிய சமூக நிறுவனத்தை உருவாக்குவதற்கு உரிமை உண்டு என்பதாகவோ அல்லது அது தனி நபர் விருப்பம் என்பதாகவோ உரிமை கோர முடியாது. இது அடிப்படை உரிமையாகாது. தனி நபரின் விருப்ப உரிமையில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பதற்கான உரிமை இல்லை. தற்போது திருமணம் என்பது சட்டத்தின்படியும், மதத்தின்படியும் புனிதமான ஒன்றாக, பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக உள்ளது. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டால், அது ஒவ்வொரு குடிமகனின் நலன்களையும் தீவிரமாக பாதிக்கும்" என்று தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

## ஜனவரி மாதம் தமிழகத்தில் மினி ஒலிம்பிக்: ஆதவ் அர்ஜூனா தகவல்

**சென்னை:** தமிழ்நாடு மாநில ஒலிம்பிக் சங்கம் சார்பில் வரும் 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் மினி ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படும் என பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

37-வது தேசிய விளையாட்டு போட்டி கோவாவில் வரும் 25-ம்தேதி முதல் நவம்பர் 9-ம் தேதிவரை நடைபெறுகிறது. இதில்தமிழகத்தில் இருந்து 446 வீரர், வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர். இவர்களுக்கான சீருடை வழங்குதல் மற்றும் வழியனுப்பு விழா தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் சார்பில் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் ஐசரி கனேஷ், பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் லதாஉள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் ஆதவ் அர்ஜூனா பேசும்போது, “ தமிழகத்தை சேர்ந்தவீரர்கள் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்ல வேண்டும் என்கிற கனவு விரைவில் நனவாகும்.மேலும் அதற்கான முன்னோட்டமாக தற்போது ஆசிய விளையாட்டு போட்டியில் தமிழகத்தை சேர்ந்தவர்கள் அதிக பதக்கங்கள் வென்றுள்ளனர்.

அவர்களை கவுரவிக்கும் விதமாக விரைவில் பிரமாண்ட விழா நடத்தப்படும். ஒலிம்பிக்கில் இடம் பெறும் 36 விளையாட்டுகளையும் உள்ளடக்கிய வகையில் சென்னையில் மினி ஒலிம்பிக் விளையாட்டு போட்டியை வரும் 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதியில் நடத்த திட்டமிட்டுள்ளோம்” என்றார்.

EVA STALIN IAS ACADEMY